# இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஊடக சுதந்திரம் தொடர்பான சர்வதேச தூதுக் குழுவின் தகவல் அறிக்கை

### "பயங்கரவாத பிடிக்குள் சிக்கியிருக்கும் யாழ் குடா நாட்டு ஊடகம்"
### ஆகஸ்ட் 2007

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் 2006ஆம் ஆண்டு மீண்டும் மோதல்கள் ஆரம்பமான கால கட்டம் முதல் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் யாழ். குடா நாடு ஊடகவியலாளர்களுக்கும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அச்சம் கொள்ளும் வாழுமிடமாக மாறியுள்ளது.

கொலை, கடத்தல்கள், அச்சுறுத்தல் மற்றும் தணிக்கை காரணமாக யாழ். குடா நாடு ஊடகத்துறையில் பணிபுரிவோருக்கு உலகில் மிக ஆபத்தான இடமாகவுள்ளது. 2006 மே மாதம் முதல் அங்கு இரு ஊடகவியலாளர்கள் உட்பட ஊடக ஊழியர்கள் குறைந்த பட்சம் 7 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஒரு ஊடகவியலாளர் காணாமற் போயுள்ளதுடன் குறைந்த பட்சம் மூன்று பத்திரிகை விற்பனை நிலையங்கள் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளன. ஊடகவியலாளர்கள் பலர் தமது பிரதேசங்களை விட்டு வெளியேறியுள்ளனர். அல்லது ஊடகத் துறையை விட்டு விலகியுள்ளனர். அரசு உறுதி வழங்கியதைப் போல் சந்தேக நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்ட போதும் முறையான விசாரணைகள் நடத்தப்படவில்லை.

இலங்கைக்கு விஜயம்செய்த ஊடக சுதந்திரம் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் சர்வதேச தூதுக் குழுவின் பங்கு தாரர்களான எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் (RSF) மற்றும் சர்வதேச ஊடக ஆதரவு (IMS) அமைப்பின் பிரதிநிதிகள் கடந்த ஜுன் 20, 21 ஆகிய தினங்களில் யாழ். குடா நாட்டுக்கு விஜயம் செய்தனர். அவாக்ள் தமிழ் ஊடகவியலாளர்கள், படை அதிகாரிகள், சிவில் அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் தேசிய மனித உரிமைகள் (HRC) அமைப்பின் உறுப்பினர்களையும் சந்தித்தனர். எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் சர்வதேச தூதுக் குழுவைச் சேர்ந்த வேறு அமைப்புக்களால் நாளாந்தம் ஊடக சுதந்திரம் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டே இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய நபர்களின் நேர்காணல்களில் அவர்களது பெயர்கள் சேர்க்கப்படவில்லை.

கடந்த வருடம் மே மாதம் 2ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் பிரபலமான நாளேடான "உதயன்" அலுவலகம் தாக்குதலுக்குள்ளானதையடுத்து அப் பிரதேச ஊடகவியலாளர்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். ஒரு பத்திரிகையின் பதிப்பாளர் கொலை செய்யப்பட்டதையடுத்து அப் பத்திரிகை மூடப்பட்டதுடன் இப்போது யாழ். குடா நாட்டில் மூனறு பத்திரிகைகளே வெளிவருகின்றன. கடந்த ஒரு வருட காலத்துக்குள் பத்திரிகை அலுவலகங்களிலிருந்து 90 வீதமான ஊழியர்கள் வெளியேறியுள்ளனர். பெரும்பாலும் ஊடகவியலாளர்களான இளைஞர்களும் ஏனைய ஊழியர்களும் தமது குடும்பத்தினரின் வற்புறுத்தல் காரணமாகவே தொழிலை விட்டுச் சென்றுள்ளனர். கடந்த ஆகஸ்ட் மாதம் "வலம்புரி" பத்திரிகையில் 75 பிரதேச ஊடகவியலாளர்கள் கடமையாற்றினர். இப்போது இந்த எண்ணிக்கை நான்காக குறைந்துள்ளது. "நாங்கள் எமது பிரதேச செய்திகளை விட தேசிய மற்றும் சர்தேச செய்திகளை தேடிச் செல்வது எமது ஊழியர்களின் அச்சம் காரணத்தாலேயே" என அப்பத்திரிகையின் பதிப்பாசிரியர் தெரிவித்தார். "செய்தியை விட எமது உயிர் மேலானதென்பது எமக்குத் தெரியும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஐயாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகும் "உதயன்" பத்திரிகை அலுவலகத்தில் மூன்று சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஒரு இளைய தலைமுறை ஊடகவியலாளருமே கடமையாற்றுகின்றனர். பத்திரிகை அலுவலகத்தை விட:டு வெளியே சென்றால் எச்சந்தர்ப்பத்திலும் கொலை செய்யப்படலாமென்ற அச்சத்தால் ஒரு ஊடகவியலாளர் கடந்த 13 மாதங்களாக அலுவலகத்தை விட்டே வெளியேறவில்லை.

தொலைபேசி மூலமாகவோ அல்லது பெக்ஸ் மற்றும் ஈமெயில் மூலமான எழுத்து மூல கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதைத் தொடர்ந்து தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் நிரந்தரமாக மாவட்டத்தை விட்டோ அல்லது நாட்டை விட்டோ வெளியேறியுள்ளனர். தகவல்களை சேகரிக்கும் தூதுக் குழுவினர் யாழ். குடா நாட்டிலிருக்கும் போதே சர்வதேச ஊடக நிறுவனமொன்றின் முழுநேர ஊடகவியலாளருக்கு இது போன்ற எழுத்து மூலமும் தொலைபேசி மூலமும் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் விடுக்கப்படும் இறுதி எச்சரிக்கை இதுவென தெரிவிக்கப்பட்டிருந்தது. அடுத்த தினமே அங்கிருந்து வெளியேற அவர் அவசரப்பட்டார்.

நாட்டின் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் சாதகமான பிரதி பலன்கள் கிடைத்துள்ளதையடுத்து இலங்கை இராணுவத்தினர் வடக்கிலும் பாரிய தாக்குதலொன்றை நடாத்த தயாராகி வருகின்றனர். இருந்தும் யாழ் குடா நாட்டில் ஊடகங்கள் அச்சம் கொண்டுள்ளன. அரசும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவோமென உடனடியாக உறுதியளிக்க வேண்டியுள்ளது.

**ஊடகத்துக்கு எதிரான செயற்பாடுகள் அதிகரிப்பு**

கடந்த முப்பது வருடங்களாக இடம்பெற்று வரும் யுத்தத்தின் போது தமிழ் ஊடகங்களே இலக்கானது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாதத்தை பிரயோகித்து "தமிழ் இனத்துக்கு" சுயமான நிர்வாக உரிமையை தரும்படி மத்திய அரசை கோரியே போராடுகின்றது. கடந்த வருடம் மீண்டும் யுத்தம் ஆரம்பமானதிலிருந்து சுமார் 5000 உயிர்கள் பலியானதுடன் லட்சக்கணக்கானோர் அகதிகளாகியுள்ளனர். முக்கியமாக வடக்கு கிழக்கு பிரதேசங்களிலேயே மோதல்கள் இடம்பெறுகின்றன. இருந்தும் விடுதலைப் புலகிள் சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களிலும் கொழும்பு நகரிலும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

நடைபெறும் மோதல்கள் காரணமாக ஏனைய பிரதேசங்களையும் விட யாழ். குடா நாடே இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்கு பிறப்பிக்கப்படுவது, போக்குவரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் நபர்களை இனங்காண அடிக்கடி சோதனை நடத்துவது போன்ற சம்பவங்கள் இதனால் இடம்பெறுகின்றன. இச் சூழல் காரணமாக யாழ். மாவட்டம் ஏனைய பிரதேசங்களை விட மாறுபட்டு காணப்படுகிறது. யாழ். மக்கள் எதிர்பார்ப்புகளை கைவிட்ட மனநிலையில் இருப்பதாக யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை மீண்டும் ஆரம்பித்துள்ளதையடுத்து பிரதேசத்தில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன. "மோசமான இந்த யுத்தத்தால்" ஆட்கடத்தல்கள் சட்ட விராத கொலைகளுக்கு வழிசெய்யப்பட்டுள்ளதாக சட்டத்தரணியொருவர் தெரிவித்தார். 2005 டிசம்பர் மாதம் முதல் 2007 மே மாதம் வரை 835 சிவிலியன்கள் காணாமற் போயுள்ளதாகவும் இவர்களில் 600 பேர் தொடர்பாக எதுவித தகவல்களும் இல்லையென மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. பிரதேச ஊடகங்கள் இந்த கடத்தல்கள் தொடர்பாக செய்திகளை வெளியிட்டாலும் ஊடகவியலாளர்களுக்கு தமது அலுவலகங்களில் தரித்து நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் இந்த காணாமற் போதலுக்கு ஆயுதப் படையினரின் தொடர்பிருப்பதால் இது தொடர்பாக புலனாய்வு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இனங்காண முடியாத அடையாளங்களின்றி இந்த கொலைக் கும்பலுடன் நடமாடும் வெள்ளை வான்கள் இந்த மோசமான யுத்தத்தின் அடையாளச் சின்னம் போன்றது. இதன் காரணமாக யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் ஊடகவியலாளர்கள் உட்பட பொதுமக்களும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் நிலைமை தொடர்பாக தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் கண்டனம் தெரிவிக்கும் எவராக இருந்தாலும் கொலை செய்யப்படக்கூடிய ஆபத்து இருப்பதாக பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தூதுக் குழுவினரிடம் தெரிவித்தார். ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் ஆகிய இருவரது கொலைகளும் வடக்கு மக்களது அபாக்கிய நிலை குறித்து செய்தி வெளியிடுபவர்கள், குரல் எழுப்புபவர்களை நிசப்தப்படுத்த சிலர் நடவடிக்கை எடுத்ததை சுட்டிக்காட்டுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். ஊடகவியலாளர்கள் பாதுகாப்புப் படையினர், ஒட்டுப் படைகள் மற்றும்

விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் துப்பாக்கி சூடுகளுக்கு மத்தியில் சிக்கியிருப்பதுடன் செய்திகள், கருத்துக்களை வெளிடுதல், படங்கள் அல்லது கேலிச் சித்திரங்களைக் கூட வெளியிட முடியாத நிலையில் அச்சத்துடன் இவர்கள் காணப்படுகின்றனர். அரசின் அமைச்சரவை அமைச்சரும், ஈ.பி.டி.பி. ஒட்டுப்படைக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தொடர்பாக கேலிச் சித்திரமொன்றை வெளியிட்ட காரணத்தால் 2006ஆம் ஆண்டு மே மாதத்தில் "உதயன்" பத்திரிகையின் இரு ஊழியர்கள் கொலை செய்யப்பட்டனர்.

2006 ஆகஸ்ட் மாதத்தில் "நமது ஈழநாடு" என்ற பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சின்னத்தம்பி சிவமகாராஜாவின் கொலை மூலம் புலிகளுக்கு பகிரங்கமாக ஆதரவு வழங்கும் ஊடகங்களின் செயற்பாடுகளை ஏற்கமுடியாதென இக்கொலைக் கும்பல் சூசமாக சுட்டிக்காட்டியுள்ளது. அவரது கொலைக்குப் பின்னர் அந்தப் பத்திரிகை மூடப்பட்டது. அரசியல்வாதியான சிவமகாராஜா (வயது 68) யாழ். நகரில் இருந்து 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இராணுவ பாதுகாப்பில் உள்ள தெள்ளிப்பளையிலுள்ள அவரது வீட்டில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டார். "நமது ஈழநாடு" பத்திரிகை 2002ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த போதே ஆரம்பிக்கப்பட்டத. இது பிரதேச செய்திகளை இலக்காகக் கொண்டதுடன் தமிழ் இனவாதத்துக்கு ஆதரவாக செயற்பட்டது. 2005ஆம் ஆண்டு டிசம்பரில் இராணுவத்தினர் இப்பத்திரிகையின் யாழ். அலுவலகத்தை சோதனையிட்டதுடன் பலமணி நேரம் அலுவலக ஊழியர்களிடமும் விசாரணை நடத்தினர். 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி ஊடக மாணவனும், தமிழ் மாணவப் பேரவையின் வெளியீடான "சாளரம்" சஞ்சிகையின் பதிப்பாசிரியருமான சகாதேவன் நிலக்ஷன் கொலை செய்யப்பட்டார். இரவு நேரத்தில் அமுல்படுத்தப்படும் ஊரடங்கு அமுலில் இருந்த போதே அவர் கொல்லப்பட்டார். யாழ். நகரில் இருந்து சுமார் 3 கிலோமீற்றர் தூரத்திலுள்ள அவரது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் வீட்டுக்குள் நுழைந்து நிலக்ஷனை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். கொலை செய்யப்பட்ட நிலக்ஷன் யாழ். பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைக்கப்பட்ட ஊடகவள பயிற்சி நிலையத்தில் மாணவராக இருந்தார்.

**அடக்கி ஒடுக்கப்படும் ஊடகம்**

2006 ஒகஸ்ட் மாதம் முதல் 2007 மே மாதத்துக்கு இடையிலான காலப்பகுதியில் பத்திரிகை அச்சிடும் தாள் மற்றும் மை வகைகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக யாழ். நகரிலிருந்து வெளிவரும் மூன்று பத்திரிகைகளும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. 2006 ஆகஸ்ட்டில் மீண்டும் மோதல்கள் ஆரம்பமானவுடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான புலிகளின் நிர்வாக பிரதேசத்துக்கூடாக செல்லும் ஏ-9 வீதி அரசால் மூடப்பட்டது. இதன் காரணமாக யாழ். குடாநாட்டுக்கு அனுப்பப்படும் உணவு மற்றும் ஏனைய விநியோகங்கள் அனைத்தும் விமானம் மூலமாகவோ, கடல் மார்க்கமாகவோ அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. இராணுவத்தினர் முதன் முதலாக பத்திரிகை அச்சிடும் தாள்களையும், மை வகைகளையும் யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசிய பொருட்கள் என்ற பட்டியலில் சேர்க்க மறுத்துவிட்டனர். செய்திக்காக மக்களின் தேவை அதிகரித்துள்ள வேளையில் இந்நிலைக்கு முகம் கொடுப்பதற்காக "உதயன்", "யாழ் தினக்குரல்" மற்றும் "வலம்புரி" ஆகிய பத்திரிகைகள் தமது விநியோகத்தை குறைக்கவும் பத்திரிகைகளின் பக்கங்களை 8 முதல் 12 பக்கங்களாக குறைக்கவும் நேரிட்டது. இந்நிலை 2006 டிசம்பர் முதல் 2007 ஏப்ரல் வரையும் தொடர்ந்தது. பத்திரிகை நிறுவனங்கள் பத்திரிகை அச்சிடுவதற்காக தரமான அச்சிடும் தாள்களையும் மை வகைகளையும் பெரும் தொகை பணம் செலவிட்டு பெறவேண்டியிருந்தது. வர்ண அச்சிடும் தாள்களை பாவித்து "வலம்புரி" பத்திரிகை அச்சிடும் நிலையும் ஏற்பட்டது.

பத்திரிகைகள் மூலமாகவும் யாழ்ப்பாணத்திலுள்ள அரச அதிகாரிகளிடமும் தொடர்ந்து கோரிக்கை விடுத்த போதும் இராணுவத்தினர் பொதுவான விநியோகத்தை நிறுத்தியிருந்தனர். எப்படியிருந்தும் இறுதியில் சர்வதேச அழுத்தம் காரணமாக மே முதலாம் திகதி பத்திரிகை அச்சிடும் தாள் மற்றும் மை வகைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதுடன் சில நாட்களின் பின்னர் கொழும்பிலிருந்து

கடல்மார்க்கமாக இப்பொருட்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. "பத்திரிகைகளுக்கு மக்கள் மத்தியில் தேவை அதிகரித்ததால் பத்திரிகை விற்பனை அதிகரித்த போதும் எமக்கு இராணுவத்தினரின் அனுதாபத்தின் மீது தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது" என "வலம்புரி" பத்திரிகையின் முகாமைத்துவ ஆசிரியர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகங்களை மூடிவிடும் செய்றபாடுகளிலேயே இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளார்கள் என யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளர் ஒருவர் நேரடியாக தெரிவித்தார். 2006 ஆகஸ்ட் மாதமளவில் சாதாரணமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை நிலவியதுடன், வாரம் முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதால் தகவல் தொடர்பு இல்லாத நிலையும் ஏற்பட்டது. விநியோகங்கள் குறைவடைந்தவுடன் செல்லிடத் தொலைபேசி சேவைகளும் முற்றாக துண்டிக்கப்பட்டன. காலம் கடந்த பின்னர் இரவு நேரத்தில் மட்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதுடன், பத்திரிகை அச்சிடும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகிறது. இருந்தும் "உதயன்" பத்திரிகை விநியோகிக்கும் வாகன சாரதி இராணுவச் சோதனைச் சாவடிக்கு அருகில் சாரதி ஆசனத்தில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டார். ஏ-9 வீதி மூடப்பட்டதால் தேசிய ரீதியில் விநியோகிக்கப்படும் சிங்கள, தமிழ், ஆங்கில பத்திரிகை விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது. பத்திரிகை விநியோகம் செய்யும் நிலையங்களுக்கு குறைந்தளவில் பத்திரிகை விநியோகிக்கப்பட்டதால் அதிக விலைக்கே விற்கப்பட்டது. சிலவேளை கொழும்பை விட 50 சதவீதம் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. யாழ். நகரில் உள்ள இணையத்தள மையங்களில் மூன்றில் இரண்டு கடந்த வருடத்துக்குள் மூடப்பட்டன. பொருளாதார நிலை சீர் குலைந்ததும், ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதும் இதற்குக் காரணங்களாகும். பிரதேச மக்களுக்கு இணையத்தளம் மூலம் செய்திகளைப் பெறுவது கஷ்டமாக இருந்தது. ஊடகவியலாளர்கள் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் நடத்தப்படும் ஊடகவள பயிற்சி நிலையத்தையே செய்திக்காக பயன்படுத்தினர். "தமிழ்நெற்" இணையத்தளத்துக்கு அரசு தடை ஏற்படுத்தியதால் யாழ்ப்பாண நிலை தொடர்பான செய்திகளைப் பெற்றுக் கொள்ள தமிழ் சிங்கள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு இருந்த சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது என தமிழ் பத்திரிகையான "சுடர் ஒளி" யின் செய்தியாளரொருவர் தெரிவித்தார். "இது பழைய உபாயமாகும்" என அவர் மேலும் தெரிவித்தார். இணையத்தள சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு உத்தியோகபூர்வமான அழுத்தம் கொடுத்து இவ்வருடம் ஜுன் 15ஆம் திகதி முதல் இந்த இணையத்தளத்துக்கு செல்லும் வழி தடுக்கப்பட்டது.

இந்த செய்தித் தட்டுப்பாட்டை வானொலி நிலையங்களே நிறைவு செய்தன. இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சேவைகளுக்கூடாக ஒளிபரப்பப்படும் பி.பி.சி. உலக சேவையின் நிகழ்ச்சிகள் இங்கு பிரபலமடைந்தது. கொழும்பிலிருந்து ஒளிபரப்பப்படும் எவ்.எம். சேவைகளை மக்கள் செவிமடுத்தாலும் அதன் மூலம் யாழ். செய்திகள் மிகக் குறைவாகவே ஒளிபரப்பப்படுகின்றன. ஈ.பி.டி.பி. ஒட்டுப் படை ஆதரவாளர்களால் தயாரிக்கப்பட்டு, இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் அலைவரிசை மூலம் ஒளிபரப்பப்படும் தமிழ் மொழியிலான செய்திகளடங்கிய நிகழ்ச்சியின் உள்ளடக்கம் தொடர்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

பொதுவான செய்திகள் தொடர்பான தகவல்களைக் கூட ஊடகவியலாளர்கள் உத்தியோகபூர்வமாக பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வருடம் மார்ச் மாதம் முதல் மனித உரிமை ஆணைக் குழு ஆராயும் சம்பவங்கள் தொடர்பாக செய்திகளை வழங்க பிரதேச அலுவலகங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பாக மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள பிரதேச ஊடகங்களுக்கு வாய்ப்பளிக்க இத்தகவல்கள் அத்தியாவசியமானவை என யாழ்ப்பாத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார். அரசின் அழுத்தம் காரணமாக எடுக்கப்பட்ட இந்த முடிவு மனித உரிமை ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பாரிஸ் (Paris) கொள்கைகளுக்கு முரணானது எனவும் அவர் தெரிவித்தார். யாழ். ஊடகவியலாளர்கள் பாதிக்கப்பட்ட மனநிலையுடன் காணப்படுகின்றனர். "கொழும்பு ஊடகங்கள் இந்தப் பகுதிக்கு நீண்ட கால இடைவேளைக்குப் பின்னரே ஊடகவியலாளர்களை அனுப்புகின்றன. இது பெருமளவு செலவு செய்ய வேண்டிய நிலையும், ஆபத்தும் உள்ளதென அவர்கள் கூறுகின்றனர். செய்தி சேகரிக்கவென படையினருடன் வருபவாக்ள் சிவிலியன்கள் குறித்து கவனம்

செலுத்துவதில்லை. எங்களுக்கு இங்கு பாதுகாப்பும் இல்லை” என வட இலங்கை ஊடகவியலாளர்கள் அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

**‘உதயன்’ ஒரு ஹீரோ**

1985 நவம்பர் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை தனது கடமையை நிறைவேற்றும் பொருட்டு யாழ்பாணத்தில் மிகவும் பிரபலமான தமிழ் தினசரியான ‘உதயன்’ அதிக இழப்புளை சந்தித்துள்ளது. 1980களில் இந்தியப் படையினரால் அவர்களது அலுவலகத்துக்கு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதுடன், 1990இல் இலங்கை யுத்த விமானம் மூலமும் குண்டுகள் வீசப்பட்டன. கடந்த 20 வருடங்களிலும் யாழ்பாணத்தில் போராட்டங்களில் ஈடுபட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் புலிகள் உட்பட ஆயுதம் ஏந்திய தமிழ் குழுக்களின் அச்சுறுத்தல்களுக்கு இந்தப் பத்திரிகையின் ஊழியர்கள் பலமுறை ஆளாகியுள்ளனர். 1999இல் ஒட்டுப்படையினரால் பத்திரிகை அலுவலகத்துக்குள் கைக்குண்டொன்று வீசப்பட்டது. யாழ் நகருக்கு மத்தியில் அமைந்துள்ள ‘உதயன்’ பத்திரிகை ஊழியர்கள் எப்போதும் விழிப்பாகவே இருப்பர். ஓர் ஊடகவியலாளர் தொடர்ந்து 24 மணிநேரமும் அலுவலகத்தில் இருப்பார். அமுல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக 2006 ஓகஸ்ட் மாதமளவில் 25 ஆயிரம் பிரதிகளாகவிருந்த பத்திரிகை விற்பனை இவ்வருடம் பெப்ரவரி மாதம் முதல் 5,000 பிரதிகளாக குறைந்துள்ளது.

2006 மே 2ஆம் திகதி யுனெஸ்கோ அனுசரணையின் கீழ் கொழும்பில் உலக ஊடக சுதந்திர தினம் கொண்டாடபட்டபோது இப்பத்திரிகை அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்த 5 நபர்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆர். குகநாதனை சந்திக்கவேண்டுமென தெரிவித்தனர். அவர்களுக்கு குகநாதனை தேடி கண்டுபிடிக்க முடியாததால் அங்குள்ள ஊழியர்கள் மீதும் உபகரணங்கள் மீதும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இத்துப்பாக்கிச் சூட்டினால் விற்பனை முகாமையாளர் சுரேஸ்குமார் (வயது-35), ரஞ்சித்குமார் (வயது-28) ஆகியோர் கொல்லப்பட்டனர். மேலும் இரு ஊழியர்கள் காயமடைந்ததுடன், பல கணினிகளும் சேதமடைந்தன. இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணையின்போது பத்திரிகை முகாமைத்துவம் சந்தேகத்திற்கிடமான ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் இருவரின் பெயரை பொலிஸாருக்கு தெரிவித்தும் இது தொடர்பாக குற்றவாளிகள் எவரையும் நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தப்படவில்லை.

கடந்த வருடம் ஆகஸ்ட் 15 ஆம் திகதி இராணுவ சோதனைச் சாவடிக்கு அருகில் பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டிருந்த சாரதியொருவர் சாரதி ஆசனத்தில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார். இதற்கு மூன்று நாட்களுக்குப் பின்னர் பத்திரிகையின் பிரதான களஞ்சியசாலை தீயிட்டு கொழுத்தப்பட்டது. அதற்கருகில் இருந்த விநியோகப் பிரிவும் சேதமானது. செப்டெம்பர் 7ஆம் திகதி ஊரடங்கு வேளையில் பத்திரிகை அலுவலக பாதுகாப்பு ஊழியர்கள் இருவருக்கு ஆயுதம் தாங்கிய ஒரு குழுவினரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதுடன், யாழ்ப்பாண மாணவர்களின் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதாக துண்டுப்பிரசுரமொன்றை அச்சிடும்படி கட்டளையிடப்பட்டது. இக்கட்டளை மீறப்பட்டால் மீண்டும் வருவோம் என ஆயுதத்தை கையில் வைத்திருந்த ஒருவர் அச்சுறுத்தல் விடுத்தார். மூன்று தினங்களின் பின்னர் ஆயுதம் தாங்கிய மூன்று பேர் பத்திரிகை அலுவலக மதிலைத்தாண்டி உட்புகுந்தனர். இச்சந்தர்ப்பத்தில் அலுவலகத்துக்கு முன்னால் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆயுதம் தாங்கிய நபர்களை தடுத்து வைத்திருந்தனர். பின்னர் அவர்களை செல்ல அனுமதித்தனர்.

ஏப்ரல் 29ஆம் திகதி யாழ் நகரில் பத்திரிகை அலுவலகத்துக்கருகில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கி ஏந்தியவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ‘உதயன்’ பத்திரிகையின் ஊடகவியலாளரான செல்வராஜா ரஜிவர்மன் கொல்லப்பட்டார். கொலைசெய்யப்படும்போது 24 வயதேயான ரஜிவர்மன் ஆறு மாதங்களாக குற்றவியல் தொடர்பான செய்திகளை எழுதிவந்தார். அவர் ஆட்கள் காணாமற்போவது தொடர்பாக புலனாய்வு செய்ய பொலிஸ் நிலையங்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர் யாழ் பல்கலைக்கழகத்தில் ஊடகவியல் தொடர்பான மாலை நேர வகுப்புகளுக்கு சென்று கொண்டிருந்தார். ‘உதயன்’ பத்திரிகையில் இணைவதற்கு முன்னர் அவர் ‘நமது ஈழநாடு’ பத்திரிகையில் கடமையாற்றினார். அப்பத்திரிகையின்

முகாமைத்துவ பணிப்பாளர் 2006 ஒகஸ்ட் மாதம் படுகொலை செய்யப்பட்டார். ரஜிவர்மனின் கொலை தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டபோதும் அதனால் பலனேதும் ஏற்படவில்லை. இருந்தும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பிடம் சிலர் இக்கொலைக்கு ஈ.பி.டி.பி. காரணமாக இருக்கலாமென தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான நிலையிலும் குறைந்த பணியாளர்களுடன் 'உதயன்' பத்திரிகை தொடர்ந்தும் வெளிவந்துகொண்டிருக்கிறது. ''எமக்கு 20 ஊடகவியலாளர்கள் உட்பட 120 ஊழியர்கள் கடந்த 2006 ஏப்ரல் மாதம் வரை கடமையாற்றி வந்தனர். இருந்தும் இப்போது அவ்வெண்ணிக்கை 58ஆக குறைந்துவிட்டது. இப்போதுள்ள ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை நான்காகும். இவர்கள் அனைவரும் அச்சத்துக்கு எதிராக போராடிவருகின்றனர்." - இவ்வாறு 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் கானமயில்நாதன் தெரிவித்தார். தாம் உட்பட இங்கு கடமையாற்றும் நான்கு ஊடகவியலாளர்களுக்கும் ஒட்டுப்படையினரின் மரண அச்சுறுத்தல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தும் 2006 மே மாதம் இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் எமக்கு தெரிந்தது என்னவென்றால் ஒட்டுப்படையினர் அவர்களுக்குத் தேவையான நேரத்தில் தாக்குதலை நடத்தமுடியும் என்பதே. நாம் அனைவரும் பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியிருக்கின்றோம் என்று கானமயில்நாதனின் பிரதி ஆசிரியர் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'உதயன்' நாளிதழின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' பத்திரிகையும் பயங்கரவாதிகளின் இலக்காகிவுள்ளது. தகவல்களைச் சேகரிக்கும் தூதுக்குழுவினர் நாட்டில் இருந்தபோதே கொலைக் கும்பல் பாவிக்கும் வெள்ளை வானில் 'சுடர் ஒளி' பத்திரிகையின் பதிப்பாசிரியர் நடேசப்பிள்ளை வித்தியாதரனை பின்தொடர்ந்துள்ளனர். 'சுடர் ஒளி' அலுவலகத்துக்கும் 2005ஆம் ஆண்டில் இரு முறை குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

**படையினருக்கு தமிழ் ஊடகங்களுக்குமிடையிலான மோதல்**

யாழ் குடாநாட்டில் எல்லா இடங்களிலும் இராணுவ முகாம்கள் இருக்கின்றன. படையினர் சகல இடங்களிலும் பரந்து காணப்படுகின்றனர். படையினரது நிர்வாகத்தின் கீழுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு செல்ல தடைவிதிக்கப்பட்ட பிரதேசமொன்று நகருக்கருகில் காணப்படுகின்றது. 99 சதவீதமான சிங்களவர்களைக் கொண்ட 40 ஆயிரம் படையினர் அங்கு நிலைகொண்டிருப்பதுடன் நகரத்துக்குள் பிரவேசிக்கவும் வெளியேறவும் சகலரும் பாஸ் பெறவேண்டும். இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் அடிக்கடி இடம்பெறும் மோட்டார் தாக்குதல்கள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களுக்கு நகரப் பகுதிகளும் பாதிக்கப்படுவதால் ஆயிரக்கணக்கான சிவிலியன்கள் அடிக்கடி தமது இல்லங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ் ஊடகங்கள் இராணுவ நடவடிக்கைகள் குறித்து செய்தி வெளியிடுவது சிரமமான விடயமாகும். சில சந்தர்ப்பங்களில் படையினரின் நடவடிக்கை குறித்து செய்திகளை சேகரிக்க கொழும்பிலுள்ள ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோது உள்ளூர் ஊடகவியலாளர்களை அறிவுறுத்த படையினர் கவனம் செலுத்துவதில்லை. தமிழ் ஊடகவியலாளர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு பதிலளிக்க தமிழ் தெரிந்த அதிகாரியொருவர் தகவல் சேகரிக்கும் தூதுக்குழுவினரிடம் மாவட்டத்துக்குள்ளோ அல்லது வேறு இடங்களிலோ இராணுவ பேச்சாளராக கடமையாற்ற எந்தவொரு தமிழரும் முன்வருவதில்லை எனத் தெரிவித்தார். படையினர் தமது பிரதேசத்தை பலாத்காரமாக கைப்பற்றியுள்ளதாகவே பிரதேச மக்களும் ஊடகங்களில் வரும் செய்திகளும் வெளியிடும் எண்ணமாகும்.

''இராணுவத்தினர் தமிழ் ஊடகவியலாளர்களை மதிப்பதில்லை." என்று கொழும்புக்கு தப்பிவந்த ஊடகவியலாளர்ரொருவர் தெரிவித்தார். "தமக்கு படையினருடன் தொடர்புகொள்ள முடியாதெனவும் முக்கியமாக படையினர் தமிழ் ஊடகவியலாளர்கள் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்றே நம்புகின்றனர்" என அவர் தொடர்ந்தும் தெரிவித்தார். "எந்த தமிழ் ஊடகவியலாளரும் கமராவை எடுத்துக்கொண்டோ அல்லது தாம் ஊடகவியலாளர் எனக் காட்டிக்கொள்ளும் வகையில் நடந்துக்கொள்வது புத்திசாலித்தனமல்ல" என 'வலம்புரி' பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் குடும்பம் பதவிக்கு வந்த நாள் முதல் யாழ் குடாநாட்டில் வன்முறையும் ஊடகவியலாளர்களுக்கெதிரான போக்கும் அதிகரித்துள்ளதென வட இலங்கை ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார். இராணுவமயப்படுத்தல் தொடர்பாக ஒரு கருத்தை எழுதினால் இராணுவ கெடுபிடிக்குள் சிக்க வேண்டிய நிலை ஏற்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இராணுவ அதிகாரிகள் கடந்த வருடம் தமிழ் ஊடகங்களின் முக்கியஸ்தர்களை அழைத்து புலிகளின் தலைவரின் பேச்சுக்கள், மாணவர் பாடசாலை பகிஷ்கரிப்பு, கடத்தல்கள் போன்றவற்றை வெளியிடவேண்டாமென உத்தியோகபற்றற்ற தடையை விதித்தனர். அதனால், இவ் ஊடகங்கள் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டன. தமிழ் தேசியம் தொடர்பான செய்திகளை வெளியிடும்படி புலிகள் கோரியதால் இந்நிலை ஏற்பட்டது.

'உதயன்' அலுவலர் ஒருவரை பலாலி இராணுவ முகாமுக்கு வரும்படி கடந்த செம்டெம்பர் மாதம் 24ஆம் திகதி ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி பணித்தார். "படையினரையும் அரசையும் கொச்சப்படுத்தும் விதத்தில் செய்திகளை வெளியிடவேண்டாம். இதை ஏற்காவிட்டால் பத்திரிகை மூடப்படும். இவ்விடயம் இரகசியமாக இருக்கவேண்டும். குறிப்பாக 'தமிழ் நெற்' இணையத்துக்கு தெரியக்கூடாது" என்று அவர் எச்சரிக்கை விடுத்தார். இருப்பினும், அச்சுறுத்தல் இருந்தபோதும் 'உதயன்' தொடர்ந்தும் இரு தரப்பினரை விமர்சிக்கும் செய்திகளை வெளியிட்டு வருகின்றது.

ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி 52ஆம் படையிணியின் அதிகாரி ஊடக முக்கியஸ்தர்களை அழைத்து புலிகள் தொடர்பான செய்திகளை வெளியிடக்கூடாது எனக் கேட்டுக்கொண்டார்.

யாழ் நகரின் 512 படையணியின் இராணுவ அதிகாரிகள் கடந்த நவம்பர் 6ஆம் திகதி பத்திரிகை ஆசிரியர்களை அழைத்து பிரிபாகரனின் மாவீரர் தினம் (27 நவம்பர்) குறித்து செய்திகளை பிரசுரிக்க வேண்டாமென பணித்தார். இந்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் 'உதயன்' அந்த உரையை வெளியிட்டது.

யாழ் குடா நாட்டில் மனிதாபிமான செய்திகள் மற்றும் உணவுப் பற்றாக்குறை தொடர்பான செய்திகள் வெளிவருவது குறித்தும் படையினர் பத்திரிகை ஆசிரியர்களை விமர்சித்தனர். இருந்தும் ஊடகவியலாளர்கள் உணவு மற்றும் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு குறித்து எழுதுவதை நிறுத்த மறுத்துவிட்டனர்.

இவ்வருட மே மாத ஆரம்பத்தில் மாணவர்கள் கடத்தப்பட்டதை எதிர்த்து யாழ் பாடசாலை மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டச் செய்திகள், படங்களை வெளியிட வேண்டாமென இராணுவத்தினர் பத்திரிகைகளுக்கு அழுத்தம் கொடுத்தனர். ஜூன் மாதம் எதுவித காரணங்களுமின்றி யாழ் தினக்குரல் அலுவலகம் படையினரால் சோதனையிடப்பட்டது.

பயங்கரவாத தடுப்புச் சட்டமூலம் 2006 டிசம்பர் முதல் அமுலுக்கு வந்ததையடுத்து யாழ் பத்திரிகைகள் சுய தணிக்கையை மேற்கொண்டு வருகின்றன. கொழும்பிலுள்ள குறிப்பாக ஆங்கில நாளேடுகள் சிவில் யுத்தம் தொடர்பான செய்திகளில் முக்கிய அம்சங்களை வெளியிடுவதைத் தவிர்த்துக் கொண்டன. யாழ் பத்திரிகைகள் இராணுவ அல்லது புலிகளின் நடவடிக்கை தொடர்பான முழு விவரங்களை வெளியிடுவதைத் தவிர்த்துக்கொண்டன.

பலாலி இராணுவ தளத்தில் இராணுவத்தினர் யாழ். எப்.எம். என்ற ஒலிபரப்புச் சேவையை யாழ். மக்களுக்காக நடத்தி வருகின்றனர். ஊரடங்கு நேரங்கள் இதன் மூலம் அறிவிக்கப்படும். "சில தகவல்கள் மக்களுக்கு பிரயோசனமாக இருக்கின்றது. இருந்தும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்பும் ஈ.பி.டி.பி.யின் இரண்டு மணித்தியால நிகழ்ச்சியை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது." என வட இலங்கை ஊடகவியலாளர் சங்க பிரதிநிதியொருவர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சி (இதய வீணை) ஈ.பி.டி.பிக்கு ஆதரவான ஊடகவியலாளர்களால் கொழும்பில் தயாரிக்கப்படுகிறது. "எம் அனைவரையும் கேவலப்படுத்தும் ஒரு மரண பிரசாரம்" என ஊடகவியலாளரொருவர் இது குறித்து தெரிவித்தார்.

**படையினர் பாவத்தின் பங்காளிகள்**

மோதல்களைக் கண்காணிக்கும் சர்வதேசக் குழு உட்பட சில சுயாதீன அமைப்புகள் தெரிவிக்கும் கருத்துகளின் படி ஊடகங்களை இலக்காகக் கொண்டு கொலைக் குழு

படையினரின் புலனாய்வு பிரிவினருடன் இணைந்து செயற்படுவதுடன் முக்கியமாக ஈ.பி.டி.பி. மற்றும் புலிகள் அமைப்பலிருந்து பிரிந்து சென்ற கருணா பிரிவினர் ஆகிய ஒட்டுப்படையைச் சேர்ந்த நபர்களாவர். இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் இந்த ஒட்டுப்படையினர் கடந்த சில வருடங்களாக ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளை சீரழிப்பதற்கு பொறுப்பு கூறவேண்டும்.

பொலிஸ் மற்றும் சோதனைச் சாவடிகள் நிறைந்துள்ள பிரதேசங்களிலேயே அநேகமான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளது. சில சம்பவங்கள் ஊரடங்கு அமுலில் இருக்கும் சந்தர்ப்பங்களிலேயே இடம்பெற்றுள்ளன. இச்சம்பவங்கள் தொடர்பாக பொலிசார் ஆரம்ப விசாணைகளை மட்டுமே நடத்தியுள்ளனர். விசாரணை நடவடிக்கைகள் அத்துடன் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த "மோசமான யுத்தத்தில்" படையினர் ஈ.பி.டி.பினரிடமுள்ள தமிழ் ஒட்டுப் படையினருக்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள இடமளித்துள்ளனர். ஈ.பி.டி.பி. கட்சி மற்றும் அதன் ஒட்டுப்படை படையினரிடமிருந்தும் அரசிடமிருந்தும் தமக்கு கிடைக்கும் பாதுகாப்பை பயன்படுத்துகின்றனர். அதன் தலைவரான டக்ளஸ் தேவானந்தா சமூக சேவைகள் அமைச்சராக இருப்பதுடன் புலிகளின் முக்கிய இலக்காகவுமுள்ளார். அவரைக் கொலை செய்வதற்கு பல முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

புலிகளின் ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிராக தமிழ் மக்களை பாதுகாப்பதாக டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார். இருந்தும் தசாப்த காலத்துக்கு அதிகமாக ஈ.பி.டி.பி. மனித உரிமைகளை மீறும் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதற்கு முன்னைய அறிக்கையில் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு தெரிவித்துள்ளபடி யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளனர். சமீபத்தில் உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பின்னாலும் அவர்கள் இருக்கின்றார்கள் என்ற சந்தேகமும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் படையினரின் நடவடிக்கையின் போதும் தமிழ் ஒட்டுப்படையினர் ஈடுபட்டுள்ளதாக தகவல்களைக் கண்டறியும் சர்வதேசக் குழு உறுதிப்படுத்தியுள்ளது. பல சந்தர்ப்பங்களில் மொழிபெயர்ப்பிலும் மற்றும் வழிகாட்டுவதில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் இராணுவ நடவடிக்கையிலும் சிவிலியன்களுக்கு எதிரான செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர்.

ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படுவது தொடர்பாக எவரும் தண்டனைக்குள்ளாகாதவரை தமிழ் ஊடகம் மற்றும் படையினருக்குமிடையில் நம்பிக்கை ஏற்படாதென யாழ். மாவட்ட தமிழ் எம்பியொருவர் தெரிவித்தார்.

**ஊடகவியலாளரொருவர் காணாமற் போய்விட்டார்**

இவ்வருடம் பெப்ரவரி 15ஆம் திகதி யாழ். நகருக்கு வடக்கேயுள்ள வடமராட்சியில் ஊடகவியலாளர் சுப்பிரமணியம் ராமச்சந்திரன் கடத்தப்பட்ட சம்பவத்தில் படையினருக்கு சம்பந்தமுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ். தினக்குரல் பத்திரிகையின் ஊடகவியலாளரான ராமச்சந்திரன் இராணுவத்தினர் மற்றும் வியாபாரியொருவருடன் இணைந்து மேற்கொள்ளும் மணல் வியாபாரம் தொடர்பான தகவல்களை புலனாய்வு மூலம் வெளியிட்டார். அந்த புலனாய்வுச் செய்தியில் மணல் வியாபாரம் தொடர்பான வாகனங்களின் பதிவு இலக்கங்களும் மற்றும் வியாபாரி மற்றும் சில இராணுவ அதிகாரிகளுக்கிடையிலான தொடர்புகள் குறித்து தகவல்களும் வெளியிடப்பட்டிருந்தன. இந்த புலனாய்வுச் செய்தி வெளியானதும் நீதிமன்ற நீதிபதியொருவர் மணல் வியாபாரத்துடன் தொடர்புடைய வாகனத்தை கைப்பற்றும்படி பணிப்புரை விடுத்தார். புலிகளின் ஆதரவாளர்கள் வியாபாரத்துக்கு பயன்படுத்தப்பட்ட மற்றுமொரு வாகனத்தை தீயிட்டுக் கொழுத்தினர்.

இராணுவத்தினருடன் ராமச்சந்திரன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு காரணமாக புலிகள் அவருக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர். 2006 நவம்பரில் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கௌரவிக்கும் கூட்டமொன்றில் புகைப்படங்கள் எடுத்தது தொடர்பாக புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் புலனாய்வு செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. அவர் கடத்தப்பட்ட காலத்தில் புலிகளின் அச்சுறுத்தல் இருக்கவில்லையென அவரது நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.

தூதுக்குழுவினர் இது தொடர்பாக சேகரித்த தகவல்களின்படி ராமச்சந்திரன் பெப்ரவரி 15ஆம் திகதி மாலை கரவெட்டியில் அவரால் நடத்தப்படும் பாடசாலையிலிருந்து நண்பரொருவருடன் வெளியேறிச் சென்றுள்ளார். கிளாலி சந்தியில் இராணுவ சோதனைச் சாவடியில் இவ்விருவரும் விசாரணைக்காக தடுக்கப்பட்டதுடன் அவரது நண்பரை விடுவித்தனர். ராமச்சந்திரன் தடுத்து வைக்கப்பட்டார். கண்ணால் கண்ட சாட்சியங்களின்படி ஒரு மணி நேரத்தின் பின்னர் படை புலனாய்வு பிரிவின் அதிகாரியொருவர் ஈ.பி.டி.பி. உறுப்பினாக்ள் இருவர் மற்றும் படைக்கு தகவல் வழங்குபவர் ஒருவரும் வாகனத்தில் அங்கு வந்துள்ளனர். இதன் பின்னர் ராமச்சந்திரன் தொடர்பான எதுவித தகவல்களும் அவரது குடும்பத்தினருக்கு கிடைக்கவில்லை.

யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டதுடன் பின்னர் அதை கொழும்பு அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளது. இது தொடர்பாக சட்டப்படி யாழ். மாவட்ட கட்டளையிடும் அதிகாரி உட்பட இராணுவத்தினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தும் “மதியாபு ரெமடியாஸ்” என்ற சட்டத்தரணியின் கருத்துப்படி “இது போன்ற சம்பவங்களில் தமக்குள்ள தொடர்பை மறுத்திருக்கும் படையினருக்கு எதிராக செயற்பட சகலரும் அச்சம் கொண்டுள்ளனர் என்பதே.

**புலிகளின் அச்சுறுத்தல்**

புலிகளின் அழுத்தம் புத்திசாலித்தனமானதும் பலனளிப்பதாகவுமுள்ளத. பிரிவினைவாத அமைப்பு விமர்சனங்களை மிக மோசமான வழியிலேயே எதிர்கொண்டது. அவர்கள் ஊடகம் உட்பட தமிழ் சமூகத்தில் தமக்கு எதிரான குரல்களுக்கு எதிராக துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டனர். இதனால் ஈ.பி.டி.பிக்கு ஆதரவான ஊடகவியலாளர்களே பெரும்பாலும் இவர்களின் இலக்காகினர். கடந்த நான்கு வருடங்களுக்குள் இது போன்ற இரு ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர்.

புலிகளின் பதில் நடவடிக்கைகள் எமது அலுவலக ஊழியர்களை பாதிக்குமென்பதால் நாம் கவனமாக செயற்படுகின்றோம். புலிகள் பற்றி இராணுவத்தினர் பற்றி தாம் குறிப்பிடும்போது பாவிக்கும் ஒவ்வொரு வசனம் குறித்தும் கவனமாக இருக்க வேண்டும். நாங்கள் பொதுவாக புலிகளை பயங்கரவாதிகள் என்று ஒரு போதும் இனங்காண மாட்டோம் என்று தமிழ் பதிப்பாசிரியரொருவர் தெரிவித்தார்.

புலிகளால் நடத்தப்படும் எதுவித தாக்குதல் குறித்து எவரும் தகவல்களை சேகரிக்கும் தூதுக் குழுவுக்கு தெரிவிக்கவில்லை. இருந்தும் தெரிவிக்க வேண்டியதென்னவென்று புலிகளினால் வழங்கப்பட்ட “ஆலோசனைகளை” மறுக்க முடியாத காரணத்தால் சில ஊடகவியலாளர்கள் நகரிலிருந்து சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் மிகச் சுறுசுறுப்பானவர்கள். அத்துடன் சகல தகவல்களையும் அறிந்து வைத்துள்ளனர். அவர்கள் சிலவேளை தகவல்களை பெற்றுக் கொள்ள அல்லது தெரிவிக்க தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அழைப்பு விடுப்பர்.

இன்னும் யாழ். மாவட்டத்தில் புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்பை கேட்கக் கூடியதாகவுள்ளது. சமூகத்தில் முக்கிய நபர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட சிலர் புலிகளின் குரல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதால் அதை செவிமடுப்போர் எண்ணிக்கை இந்த நாட்களில் குறைந்துள்ளதாக தெரிவித்தனர். “மக்கள் அதை செவிமடுக்க அச்சம் கொண்டுள்ளனர்” என யாழ். ஆயர் தெரிவித்தார்.

**மௌனம், வெளியேறுதல் அல்லது மரணம்**

இன்னும் யாழ்ப்பாணத்திலுள்ள பயங்கரவாத நிலைமை காரணமாக அங்குள்ள பல ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை விட்டுச் செல்கின்றனர். எஞ்சியவர்கள் தமது நடவடிக்கைகளை மிக கவனமாக மேற்கொள்வதுடன் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு தகவல் வழங்குவோர் தாம் தகவல் வழங்குவதை இனம் காட்டிக் கொள்ள மறுக்கின்றனர். பி.பி.சி உலக சேவையின் சிங்கள நிகழ்ச்சிக்கு தகவல்களடங்கிய நிகழ்ச்சிகளை வழங்கிய அதேபோல் வெளிநாட்டு ஊடகவியலாளர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் வேளைகளில் உதவிகள் வழங்கிய மயில்வாகனம் நிமலராஜனுக்கு நேர்ந்த கதியை அடிக்கடி ஞாபகப்படுத்துகின்றனர்.

அந்த ஊடகவியலாளர் 2000ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு இரவில் அவரது வீட்டில் வைத்தே ஈ.பி.டி.பியினரால் கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் பலர் ஒட்டுப் படையினராலோ அல்லது பாதுகாப்பு படையினராலோ அச்சுறுத்தப்பட்டு தற்போது மாவட்டத்தை விட்டே வெளியேறியுள்ளனர். அதில் பலர் நாட்டை விட்டே வெளியேறிவிட்டனர். விடுதலைப் புலிகளினால் ஏற்பட்ட இடைஞ்சல்களும் ஊடகவியலாளர்கள் பிரதேசத்தை விட்டு வெளியேறுவதற்கு காரணமாகவிருந்துள்ளது. இலங்கை ஊடகவியலாளர்கள் சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், பிரிட்டன், இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

தகவல்களை சேகரிக்கும் சர்வதேசக் குழு யாழ்ப்பாணத்தில் இருக்கும் போதே அசோசியேட்டட் பிரஸ் செய்தி ஏஜன்சியின் நிருபர் ஜெயன் வின்சன்ட்டின் செல்லிடத் தொலைபேசிக்கு செய்தியொன்று வந்தது. அதன் தலைப்பு “இறுதி எச்சரிக்கை” என்றிருந்தது. அந்தச் செய்தியை அனுப்பியதுமக்கள் படை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மக்கள் படை புலிகளின் தாக்குதல்களுக்கு உரிமை கோரிய ஒன்றாகும். அந்தச் செய்தியில் ஜெயன் வின்சன்ட் எந்த நேரத்திலும் கொலை செய்யப்படலாமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. சில மணித்தியாலங்கள் கடந்த பின்னர் செய்தியை அனுப்பிய நபர் ஜெயன் வின்சன்ட்டுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். ஊடகவியலாளர் சேவையாற்றிய நிறுனம் உடனடியாக தலையிட்டு அவரை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வருவதற்கு படையினரின் அனுமதியைப் பெற்றுக் கொடுத்தது. “இந்த அச்சுறுத்தலுக்குப் பின் யார் இருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியாது. இராணுவ நடவடிக்கை தொடர்பாகவும் மனிதாபிமான நிலை குறித்த எனது செய்திகள் தொடர்பாகவும் எந்தத் தரப்பும் திருப்தியடையவில்லை. இதனால இதன் பின்னணியில் எவராவது இருக்கலாம்” இவ்வாறு அவர் தூதுக் குழுவினரிடம் தெரிவித்தார்.

**பிரசாரப் போர்**

இலங்கையில் நடைபெறும் சிவில் யுத்தம் இலங்கையின் பல ஊடகங்களின் மூலமும் சர்வதேச ஊடகங்கள் மூலமும் அரைகுறையாக அல்லத பக்கச்சார்பாக வெளியிடப்படுகிறது. முக்கியமாக செய்தி தட்டுப்பாடு காரணமாகவும் சிலவேளை இலக்குகளைக் கொண்ட செய்திகளால் மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களிலுள்ள ஊடகவியலாளர்களின் கடமை சிக்கலுக்குள்ளாகியுள்ளது.

“நான் நினைக்கின்றேன் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்கள் யுத்த காலங்களில் அச்சமின்றி செயற்பட வேண்டும். இருந்தும் இங்கு விஜயம் செய்யும் ஊடகவியலாளர்கள் சுயாதீன மூலங்கள் குறித்து கவனம் செலுத்துவதில்லை. இதனால் இராணுவத்தினர் இங்கு இடம்பெறும் விடயங்களை மறைத்து அவர்களது கொள்கைகளை நடைமுறைப்படுத்த இலகுவாகவுள்ளது. ஊடகம் எப்போதும் யாழ்ப்பாணத்துக்கு வந்து சிவிலியன்கள் மற்றம் சுயாதீனமான நபர்களை சந்திப்பது அத்தியாவசியமாகும்.” இக்கருத்து யாழ். ஆயர் சௌந்தரநாயகத்தினுடையது.

சிறு எண்ணிக்கையிலான தேசிய மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்களே யாழப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றனர். தேசிய நாளிதழொன்றின் யாழ். ஊடகவியலாளர் இத் தூதுக் குழுவினரிடம் கூறியதாவது “என்னிடம் ஒரு செய்தியிருந்தால் நான் எனது பத்திரிகை ஆசிரியருக்கு குறுஞ்செய்தியொன்று (sms) அனுப்புவேன். அவர்கள் அச்செய்தியை எனது பெயரில் எழுதுவார். யாழ்ப்பாணத்தில் செய்திகளை சேகரிப்பதும் மிகவும் ஆபத்தானது” எனத் தெரிவித்தார்.

இவ்வாறு பிரதேசத்தில் ஊடகவியலாளர்களும் கண்காணிப்பாளர்களும் இல்லாதிருப்பதால் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்புகளுக்கும் யுத்தம் தொடர்பான தன்னிச்சையான புள்ளி விபரங்களை தெரிவிக்க வசதியாகவுள்ளது. இராணுவத்தினர் கிழக்கு மாகாணத்தின் தொப்பிகலயிலிருந்து புலிகளை விரட்டியடித்த பின்னர் கிளர்ச்சியாளர்கள் 450 பேரும் 20 படையினரும் கொல்லப்பட்டதாக அரசு தெரிவித்தது. இருந்தும் புலிகள் தமது போராளிகள் 60 பேரும் படைத் தரப்பில் குறைந்தபட்சம் 150 இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாக தெரிவித்தனர்.

யுத்தம் ஆரம்பமானதிலிருந்து தாம் கொலை செய்ததாகக் கூறும் போராளிகளின் எண்ணிக்கையைக் கூட்டினால் முழு நாட்டிலும் இன்னும் தமிழர்கள் எஞ்சியிருப்பது

உங்களுக்கு ஆச்சரியமாகவிருக்குமென வெளிநாட்டு ஊடகவியலாளரொருவா் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகவியலாளரொருவர் இது தொடர்பாக தனது கருத்தை இவ்வாறு தெரிவித்தார். "இரண்டு தரப்பக்கும் பெரும் இழப்புகள் ஏற்பட்டிந்தாலும் இரண்டு தரப்பும் தத்தமது சிவில் ஆதரவாளர்களை அதைரியப்படுத்த விரும்பாத காரணத்தால் இதை ஏற்றுக் கொள்வதில்லை."

**சர்வதேச தகவல் சேகரிக்கும் குழு இலங்கை அரசை கேட்டுக் கொள்வதாவது**

- யாழ்ப்பாணத்தில் ஊடக ஊழியர்களது கொலை தொடர்பாக பகிரங்க விசாரணை நடத்த வேண்டும்.
- மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களில் ஊடக ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.
- மனித உரிமைகளைப் பாதுகாக்க ஐ.நா. குழுவை இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

**போரிடும் சகல தரப்புகளுக்கும் குழு விடுக்கும் செய்தி**

- ஊடக ஊழியர்கள் மீதான அச்சுறுத்தல்கள் கெடுபிடிகளை நிறுத்த வேண்டும்.
- ஆயுத மோதல்கள் குறித்த செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான ஐ.நா. பாதுகாப்பு சபையின் இலக்கம் 1738 ஆவது ஆலோசனைக்குட்பட்ட ஷரத்துக்களை மீறும் வகையில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் அச்சுறுத்தல்கள் நிறுத்தப்பட வேண்டும்.